கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் வேலூர். வேலூர் மாவட்டம்
ஐ.டி.எண்.1/2025

2026ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 02-ஆம் தேதியில் திரு. குணசேகரன் என்பவரின் மு.வி. வாக்குமூலம் (1908-ஆம் ஆண்டின் சட்டம் 10-வது கட்டளை மற்றும், தொழில் தகராறு சட்டம் 1947ன் படி) Bench Clerk Tmt. R. Deepika ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்யப்படுகிறது.
Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 on the day of 02.01.2026.

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | குணசேகரன் |
| 2. தந்தையார் பெயர் | : | ராமசாமி |
| 3. தொழில் | : | |
| 4. வயது | : | |
| 5. முகவரி | : | |

**முதல் விசாரணை**:-

தொழிலாளர் தரப்பு சாட்சி 1 என்னுடைய வழக்கிற்கு ஆதரவாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில காணப்படும கையொப்பம் என்னுடையதுதான். எங்கள் தொழிற்சங்கம் பதிவு செய்யப்பட்டதற்கான சான்று மற்றும் அதனுடைய துணை விதிகள் **தொ.த.சா.ஆ.1**. மனுதாரர் யுனியன் நிர்வாகத்திடம் வைத்த கோரிக்கைகளின் நகல் **தொ.த.சா.ஆ.2**. மனுதாரர் சங்கம் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு வைத்த கோரிக்கைகளின் நகல் **தொ.த.சா.ஆ.3**. தொழிலாளர் உதவி ஆணையர் பதிவு செய்த சமரச முறிவு அறிக்கை **தொ.த.சா.ஆ.4**. நிர்வாகம் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று ஒப்பந்தத்திற்கு வராததால் சங்கம் நிர்வாகத்திற்கு அனுப்பிய போராட்டத்தின் அறிவிப்பு நகல் **தொ.த.சா.ஆ.5**. 22.01.2025 அன்று எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு எதிராக விழுப்புரம் தலைமை குற்றவியல் நடுவர் அவர்களால் வழங்கப்பட்ட உத்தரவின் நகல் **தொ.த.சா.ஆ.6**. 29.07.2025 அன்று எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு எதிராக விழுப்புரம் தலைமை குற்றவியல் நடுவர் அவர்களால் வழங்கப்பட்ட உத்தரவின் நகல் **தொ.த.சா.ஆ.7.** இணைஇயக்குநர் தொழிலக

பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் சங்கத்தின் செயலாளருக்கு அனுப்பிய 07.08.2025 தேதியிட்ட பதிலின் நகல் **தொ.த.சா.ஆ.8.**

(**தொ.த.சா.ஆ.2** எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்பட்டது.)

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.01.19 14:25:37 +0530